DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பிரமணி | Village | வாணியம்பாடி |
| Father's Name | பொன்னுசாமி | Taluk | வாணியம்பாடி |
| Age | 68 | Calling | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **12.02.2026**

**E.A. No.18/2019 in EP.No.2/2018** **வா.சா.2** **05.31 PM – 05.57 PM**

**குறுக்கு விசாரணை– (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

1. 02.05.1974ல் நான் பதிவு செய்யப்பட்ட எழுத்தர் என்பதை காண்பிப்பதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எழுத்தர் என்ற முறையில் தரப்பினர்களுடைய புகைப்பட கொண்ட அடையாள அட்டை எதுவும் நான் தனிப்பட்ட முறையில் பதிவு செய்து பதிவேடு எதுவும் பராமரிப்பது இல்லை என்று சொன்னால் சரிதான். 02.05.1974 ல் தேதியிட்ட ஆவணத்தை நான் நேரடியாக எப்போது பார்த்தேன் என்று சொன்னால் கடந்த 02.12.2025ம் தேதி என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கையொப்பம் விடும் சமயம் பார்த்தேன்.

2. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை ஏற்கனவே தயார் செய்து கொண்டு வந்தார்கள் நீதிமன்றத்தில் வைத்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த சமயம் என்னிடம் காண்பிக்கப்பட்ட ஒளிநகல் ஆவணத்தை பார்த்து தான் நான் தற்போது சாட்சி மன்னிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 02.05.1974ல் எந்த நபர்கள் வந்தார்கள் அவர்களுடைய புகைப்படத்தை பத்திரத்தில் ஒட்டும் பழக்கம் அந்த சமயம் தற்போது ஒளிப்பதிவு செய்யப்படும் முறை போன்று எந்த பழக்கமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

3. 50 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அவர்களுடைய அடையாளங்கள் மற்றும் யார் தயார் செய்தார்கள் யார் யார் வந்து சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்பது சரியாக கூற முடியாது என்று சொன்னால் சரியல்ல சாட்சியம் கையொப்பமிட்ட இரண்டு

நபர்களை மட்டும் எனக்கு தெரியும். இந்த உயில் யார் பெயருக்கு எழுதப்பட்டது என எனக்கு தற்போது நினைவில்லை என்று சொன்னால் சரியல்ல மனோகரன் பெயருக்கு எழுதப்பட்டது. மேற்படி மனோகரன் அந்த உயில் எழுதும் சமயம் என்னுடைய அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி மனோகரன் யார் என்று இன்றைய தேதி வரை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். உயில் எழுதுகின்ற நபரின் உடைய வயது எவ்வளவு இருக்கும் என எவ்வளவு இருக்கும் என எழுதும் பழக்கம் அந்த சமயம் இல்லை என்று சொன்னால் சரியல்ல எழுதப்பட்டிருக்கிறது. பொதுவாக அந்த காலத்தில் உடல்நிலை நன்றாக இருந்தால் உயில் எழுத வர மாட்டார்கள் என்று சொன்னால் இருக்கலாம்.

***(சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்து கேள்வி கேட்க 1ம் எதிர்மனுதாரரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்ட உயிலை கேட்டபோது, இந்த மனுவின் வழக்குகோப்புகள் தேடி பார்த்தும் கிடைக்காததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.